1987 மே 6]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அந்த மாவட்டத்திலே 5 தொகுதிகள் இருக்கின்றன. அந்த 5 தொகுதிகளுக்குள்ளேதான் வரும். எந்தெந்த ஊர் என்ற பட்டியல் என்னிடம் இல்லை.

மதுரை—எர்ணாகுளம் சாலை.

620—(*வினா எண். 13805) திரு. சி. சுப்புராயர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை-எர்ணாகுளம் சாலையை தேசிய நெடுஞ் சாலையாக ஆக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது வேலை துவங்கும் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இத்திட்டம் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. சி. சுப்புராயர் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, எனது கம்பம் தொகுதி கேரளாவின் எல்லையில் உள்ளது. எனது தொகுதியில் உள்ள அனைத்து முக்கிய விவசாயப் பொருள்களும் எர்ணாகுளத்திற்குச் சென்று ஏற்றுமதியாகிறது. மதுரையிலிருந்து கம்பம் வழியாக எர்ணாகுளம் செல்லும் பாதையை தேசிய நெடுஞ்சாலையாக மாற்றுவதற்கு மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மத்திய அரசோடு பேசி முயற்சி எடுக்கலாம்.

திரு. சி. சுப்புராயர் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, எனது தொகுதியின் எல்லையில் கேரளாவுக்குச் செல்லும் பாதை மலைப் பாதையாக இருக்கிறது. அடிக்கடி மழை பெய்வதால் சாலைகள் மோசமாகிவிடுகின்றன. எனவே உத்தமபாளையத்திலிருந்து குமுளிவரை செல்லும் சாலைக்கு தனியாக நிதி ஒதுக்கி, சரி செய்ய மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சரவர்கள் ஆவன செய்வார்களா ?

(முற்பகல் 10–50)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், மழை பெய்த காரணத்தினாலே வருத்தப்படுகின்றாரோ என்ற எண்ணம் வந்து விடக்கூடாது. மழை தேவையாக இருக்கின்றது ஆனால் அங்கே பாதைகள் சரியாகப் பராமரிக்கப்பட வேண்டும் என்பதில் அரசாங்கம் தனி கவனம் செலுத்திக்கொண்டு இருக்கிறது. மலைப் பகுதிகளில் உள்ள பாதைகளில் அரசு கவனம் செலுத்தி அவற்றை சீரமைக்க இந்த அரசு முயற்சிகளை மேற் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பாதிக்கப்பட்டுள்ள பாதைகள் அங்கே இருக்குமானால் அவைகளைப் பற்றி கடிதம் எழுதி கேட்கிறபோது தக்க நடவடிக்கை எடுக்கப் படும்.

நெல்லை மாவட்டம் பால் உற்பத்திச் சங்கங்கள்.

621—(*வினா எண். 4417) திரு. தெ. பெருமாள்: மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெல்லை மாவட்டத்திலுள்ள பால் உற்பத்திச் சங்கங்கள் பால் உற்பத்தியாளர் ஒன்றியத்துடன் இணைக்கப் பட்டு விட்டனவா ?

(ஆ) இல்லையெனில், அவை எப்பொழுது இணைக்கப் படும் ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) திருநெல்வேலி மாவட்ட பிரிவினைக்கு முன் அம் மாவட்டத்தில் மொத்த பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களின் எண்ணிக்கை 660 ஆகும். இவற்றில் நாங்குநேரி மற்றும் ராதாபுரம் தாலுக்காக்களில் உள்ள 81 சங்கங்கள், கன்னியாகுமரி மாவட்ட பால்வள உற்பத்தியாளர்கள் கூட்டு றவு ஒன்றிய விவகார எல்லையில் உள்ளன. மிகுதியுள்ள 579 சங்கங்களில், 305 பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்கள், திருநெல்வேலி மாவட்ட பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. திருநெல்வேலி